**Date: 09.08.26**

# இந்திய பொருள்கள் மீது 100% வரி: அமெரிக்காவில் மசோதா நிறைவேற்றம்

**வாஷிங்டன், ஆக. 8:** இந்தியா உள்பட ரஷியாவிடமிருந்து அதிக அளவில் பெட்ரோலியப் பொருள்களை வாங்கும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 100 சதவீத சுங்க வரி விதிக்க வகை செய்யும் மசோதாவுக்கு அமெரிக்க நாடாளுமன்ற மேலவையில் (செனட்) வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளிக்கப்பட்டது.

'லிண்ட்ஸே ஓ. கிரஹாம் ரஷிய, ஈரான் தடைச் சட்டம் 2026' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட இந்த இரு கட்சி ஆதரவு மசோதா மீது மேலவையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 86 எம்.பி.க்கள் ஆதரவாகவும், 11 பேர் எதிராகவும் வாக்களித்தனர். அதிக உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்த மசோதா நிறைவேறியது.

இந்த மசோதா ஆளும் குடியரசு கட்சியின் மேலவை உறுப்பினராக இருந்த லிண்ட்ஸே கிரஹாம், ஜனநாயக கட்சி உறுப்பினர் ரிச்சர்ட் புளுமெந்தல் ஆகியோர் சார்பில் கொண்டுவரப்பட்டது. உக்ரைன் தலைநகர் கீவ் நகருக்கு அண்மையில் மேற்கொண்ட பயணத்தின்போது கிரஹாம் திடீரென உயிரிழந்தார். அதைத் தொடர்ந்து, இந்த மசோதாவுக்கு அவரின் பெயர் வைக்கப்பட்டது.

மேலவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வரும் ஆகஸ்ட் 31-ஆம் தேதி கூடவுள்ள அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையிலும் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட உள்ளது.

பிரதிநிதிகள் சபையில் இந்த மசோதா ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதன் பிறகு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையொப்பமிட்டவுடன் இந்த மசோதா சட்டமாக மாறிவிடும்.

சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஆண்டுதோறும் பிப். 10, ஆக. 10 ஆகிய இரு நாள்கள் தேசிய குடற்புழு நீக்க நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் இந்த நாளில் தமிழக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்தின் சார்பில் குடற்புழு தொற்று தடுப்பு மாத்திரை வழங்கும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது.

# பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியருக்கு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை கருணைப் படியாக வழங்குவது சலுகைதானே தவிர உரிமை அல்ல

## உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஆக. 8:** பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியருக்கு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை கருணைப்படியாக வழங்குவது சலுகைதானே தவிர, உரிமை அல்ல என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

மத்திய அரசின் தபால் துறையில், கடந்த 1996-ஆம்

பணிநீக்கம் செய்து தபால் துறை உத்தரவு பிறப்பித்தது. பணிநீக்கம் செய்யப்பட்டு இரு ஆண்டுகளுக்குப் பின்னர், தபால் துறையில் 14 ஆண்டு



திகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், என்.செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், பணி

# தீர்ப்பாயங்களின் தலைவர்களை நியமிக்க ஆணையம்: மக்களவையில் விரைவில் மசோதா

**புது தில்லி, ஆக.8:** பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள், உறுப்பினர்களை நியமிக்க ஆணையம் அமைக்கும் தீர்ப்பாய சீர்திருத்தங்கள் மசோதா, அடுத்த வாரம் மக்களவையில் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள், உறுப்பினர்களின் தேர்வு மற்றும் நியமனத்தை சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் மேற்கொள்வதை உறுதி செய்யும் நோக்கில், இந்த மசோதா கொண்டுவரப்பட உள்ளது.

தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட வேண்டும், அவர்களுக்கான ஊதியம், அந்தப் பொறுப்புகளுக்கு அவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதி உள்ளிட்டவை இந்த மசோதாவில் வரையறுக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் அறிமுகம் செய்யப்பட உள்ள இந்த மசோதா, தேசிய தீர்ப்பாயங்கள் ஆணையம் அமைப்பதற்கான கட்டமைப்பையும் வகுத்துள்ளது.

புது தில்லியை தலைமையகமாக கொண்டு செயல்பட உள்ள அந்த ஆணையத்தில் ஒரு தலைவர், 2 நீதித்துறை உறுப்பினர்கள், 2 தொழில்நுட்ப உறுப்பினர்கள் என மொத்தம் 4 உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

---

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஆக. 7:** பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் காகித அடிப்படையிலான வங்கி நடைமுறைகளுக்காகக் கொண்டு வரப்பட்ட 135 ஆண்டுகள் பழைமையான '1891-ஆம் ஆண்டின் வங்கிப் புத்தகச் சான்றியல் (பேங்கர்ஸ் புக் எவிடென்ஸ்) சட்டத்துக்கு' பதிலாக, மத்திய அரசு மக்களவையில் அறிமுகப்படுத்திய 'வங்கிப் புத்தகச் சான்றியல் மசோதா - 2026' ஆக.5-ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது.

இதைத்தொடர்ந்து வரும் வாரத்தில் மாநிலங்களவையில் இந்த மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முனைப்பு காட்டி


Phone No: 73739 11577 & 73739 11133

# யு-20 உலக தடகள சாம்பியன்ஷிப்: ஈட்டி எறிதலில் ஆசிஷுக்கு வெள்ளி



ஆசிஷ் யாதவ்

**யுஜின், ஆக. 8:** யு 20 உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஆசிஷ் யாதவ் ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஈட்டி எறிதலில் மூன்றாவது சுற்றில் 74.09 மீ தொலைவு எறிந்து வெள்ளி வென்றார் ஆசிஷ். இப்போட்டியில் இந்தியாவுக்கு இது முதல் பதக்கமாகும். 72.35 மீ தொலைவு எறிந்து 6-ஆவது இடம் பெற்றார் தரணிதரன்.

கடந்த 2016-இல் போலந்தில்நடைபெற்றபோட்டியில் ஜாம்பவான் நீரஜ் சோப்ரா 86.48 மீ தொலைவு எறிந்து தங்கம் வென்றிருந்தார்.